ORIGINAL ARTICLE

# தமிழ்மொழியைத் தேர்வு பாடமாக எடுப்பதில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்: ஓர் ஆய்வு

## [TAMIḺMOḺIYAIT TĒRVU PĀṬAMĀKA EṬUPPATIL IṬAINILAIPPAḶḶI MĀṆAVARKAḶ ETIRNŌKKUM CIKKALKAḶ: ŌR ĀYVU]

## ISSUES FACED BY SECONDARY SCHOOL STUDENTS IN TAKING TAMIL AS AN EXAMINATION SUBJECT: A RESEARCH

**சத்தியா த/பெ சின்னையா / Sathiya Sinaiah *[1]**
**ரவிந்திரன் மாரையா / Ravindaran Maraya [2]**
**உஸ்மான் என் சோன்பாடா / Usman N. Sonfada [3]**

[1] Department of Indian Studies, Faculty of Arts & Social Sciences, University Malaya, 50603 Kuala Lumpur, Malaysia.Email: kaizens.satya@gmail.com
[2] Department of Indian Studies, Faculty of Arts & Social Sciences, University Malaya, 50603 Kuala Lumpur, Malaysia. Email: ravindaranm@um.edu.my
[3] Federal College of Education, Kontagora, Niger State, Nigeria. Email: usonfadanagogo@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/231

**Abstract**

Ancient Indian influences in Malaysia dates to BC 110, when certain parts of pre-colonial Malaysia like Kadaram (Kedah) and the Malacca Sultanate (Melaka) were still part of the Greater India kingdoms. The archaeological excavations at Bujang Valley, located near present day Merbok in Kedah, have revealed a wealth of relics and ruins, including Hindu icons, stone caskets, and tablets that may date back to more than 2,535 years ago. This is a proof that Tamil is rooted in Malaysia since very long time ago. Malaysian Indians are merely proud about the history but most of them are less bothered about issues revolving around Tamil Education. This is 21st century, but until now Tamil students from vernacular schools is facing various issues when he/she is showing interest to take Tamil as one of the major examination subjects in secondary school. There are many underlying issues for this problem and this research paper is intended to find out type of issues these kids are facing in secondary school and possible solutions.

**Keywords**: Malaysian Indians, Tamil, Tamil Education, Examination Subject, Secondary Schools, Tamil Students

**ஆய்வுச் சாரம்**

மலையகத்தில் தமிழர்களின் தாக்கம் கிமு 110 இல் இருந்தே தொடங்கிவிட்டது என்பது யாவரும் அறிந்ததே. மலாக்காவும் கடாரமும்(இன்றைய கெடா) சோழ மன்னரின் ஆட்சியில் இருந்த காலம் துவங்கி, தமிழர்களின் கால்தடமாக பல வரலாற்றுச் சான்றுகள் இன்றுவரை பூஜாங் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட பெருமையைத்தான் மலேசியத் தமிழர்கள் பேசி வருகின்றனரே தவிர, மலேசியாவில் தமிழ்மொழி படும் அல்லல் குறித்த சிந்தனை பெரும்பான்மை தமிழர்களுக்கு இருப்பதில்லை. “மொழியை மறந்த சமுதாயம் நெடுங்காலம் நிலைத்து நிற்பது சாத்தியமன்று. ஒரு மொழியை நீடூழி வாழ வைப்பதற்கு அம்மொழிச் சார்ந்த கல்வி இன்றியமையாததாகும். அவ்வகையில் மலேசிய திருநாட்டைப் பொருத்தமட்டில், தொடக்கப்பள்ளியில் தமிழ்க்கல்வியை முறையாக பெரும் மாணவர்கள், இடைநிலைப்பள்ளி சென்றதும் தமிழினைத் தேர்வுப்பாடமாக எடுப்பதற்குப் பெரும் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்பதனைத் தமிழாசிரியார்களும் தமிழ்ப்பால் பற்று கொண்ட தமிழ்மாணவர்களும் மட்டுமே அறிவர். ஆகவே, இவ்வாய்வானது தமிழ்மொழியைத் தேர்வு பாடமாக எடுப்பதில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அடையாளம் காண்பதோடு, அச்சிக்கல்களைக் களைவதற்கான பரிந்துரைகளையும் முன்வைக்கும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்**: மலேசியத் தமிழர்கள், தமிழ்க்கல்வி, தேர்வுப்பாடம், தமிழ்மாணவர்கள், இடைநிலைப்பள்ளி, தமிழ்மொழி

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 14th January 2023, revised 6th February 2023, accepted 17th February 2023

**முன்னுரை**

*“மலேசியாவில் மழலையர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்க்கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறையுடன் மொழியியல் துறையிலும் ஆய்வுகள் பல செய்யப்பட்டு வருகின்றன. எனினும், மலேசியாவில் தமிழ்க்கல்வி இன்றைய நிலையில் சரிவைச் சந்தித்து வருகின்றது”(என்.எஸ்.இராஜேந்திரன், 2021)* [1]. இடைநிலைப்பள்ளி தமிழ்க்கல்வி என்று கூறும்பொழுது, புகுமுக வகுப்பு துவங்கி படிவம் ஐந்து வரை தமிழ்வகுப்பு நடத்தப்படுகிறது, ஆறு ஆண்டுகள் தமிழ்ப்பள்ளியில் முழுமையான தமிழ்க்கல்வியைப் பெற்று இடைநிலைப்பள்ளியில் பல்லாயிரம் கனவுகளோடு காலடி எடுத்து வைக்கும் தமிழ்மாணனுக்கு,, இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வியைப் பொருத்தமட்டில் காத்திருப்பது பல்வேறு ஏமாற்றங்கள்தான். இச்சிக்கல்கள் நமது தமிழ்மாணவனை உடலியியல், உளவியல் மற்றும் மனோவியல் ஆகிய மூன்று நிலைகளிலும் ஆட்கொள்கின்றன. “*நம் நாட்டின் தேசிய கல்வி திட்டத்தின்படி, கல்வி என்பது ஒரு மாணவனின் உடல், உள்ளம், ஆன்மீகம் மற்றும் அறிவாற்றல்*

*வளர்ச்சிக்கு ஒரு பாதையாக அமைகின்றது"(Sufean Hussein, 2014)[2].* இந்நிலையில் முழுமையாக கிடைக்காத கல்வி, நிச்சயம் நம் தமிழ்மாணவர்களுக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இதுவே தமிழ்மாணவர்களின் எண்ணிக்கை இடைநிலைப்பள்ளிகளில் பெருமளவில் குறைவதற்கான காரணிகளாக அமைகின்றன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தமிழாசிரியர் என்ற முறையில், இச்சிக்கல்களுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற தீராத் தாகம் இருப்பினும், ஆசிரியரின் ஆளுகைக்கு அப்பாற்பட்டும் பல சிக்கல்கள் நிலவுவது வருத்தத்தையே அளிக்கின்றது.

## சிக்கல்கள்

### அட்டவணைக்கு அப்பாற்பட்ட தமிழ்வகுப்பு

ஆம், முக்கால்வாசி இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்வகுப்புகள் அட்டவணைக்கு அப்பாற்பட்டுதான் நடத்தப்படுகின்றன. இதற்கான காரணம் என்னவென்று பார்க்கையில், தமிழ்மொழிப் பாடம் இடைநிலைப்பள்ளிகளில் முக்கியப் பாடங்களுள் ஒன்றாக கருதப்படுவதில்லை. ஆறாம் ஆண்டு வரை அதிகப்பட்சம் 7 பாடங்கள் மட்டுமே படிக்கும் மாணாக்கர் படிவம் 1 முதல் 10 இல் தமிழ்மொழியைத் தவிர்த்து 10 பாடங்கள் வரை படிக்கின்றனர். இந்நிலையில் இப்பத்து பாடங்களையும் அட்டவணைக்குள் கொண்டு வருவது தான் இடைநிலைப்பள்ளியில் முக்கிய நோக்காக இருக்கின்றதே தவிர, கூடுதல் பாடமாக கருதப்படும் தமிழ்மொழிக்கென்று நேரம் ஒதுக்குவது அரிதாக உள்ளது. *"இடைநிலைப்பள்ளிகளில், தமிழ் விருப்பப் பாடாங்களில் ஒன்றாக உள்ளது எனினும், அனைத்துத் தமிழ் மாணவர்களும் அவ்வகுப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. தமிழ்ப்பள்ளியிலிருந்து வந்த – ஆர்வம் உடைய மாணவர்கள் மட்டுமே அதனால் பயன் அடைவார்கள்"*(பரமசிவம், 2006)[3]. இதற்கேற்றார்போல், இடைநிலைப்பள்ளியில் தமிழ்மாணவர்களின் எண்ணிகையும் மிக குறைவாக இருக்கும் பட்சத்தில், அட்டவணைக்கு அப்பாற்பட்டு இவ்வகுப்புகளை நடத்துவதில் பெருமளவில் எதிர்ப்புகள் வருவதில்லை. தொடக்கப்பள்ளியில் 100 மாணவர்கள் தமிழ் எடுத்தார்களேயானால், இடைநிலைப்பள்ளிக்கு வரும் பொழுது அம்மாணவர்கள், 50 ஆக குறைகின்றனர். இதற்குப் பல காரணங்களை மாணவர்கள் கூறினாலும், அட்டவணைக்கு அப்பாற்பட்டு நடத்தப்படும் தமிழ்வகுப்புகள்தான் முதன்மை காரணங்களாகின்றன.

ஏனேனில், இவ்வகை வகுப்புகளினால், போக்குவரத்துச் சிக்கல், பள்ளி நேரத்திற்குப் பின்னர் வீட்டில் சகோதரர்களைப் பார்த்துக் கொள்ளுதல், புறப்பாட நடவடிக்கையில் கலந்து கொள்ளுதல், கூடுதல் வகுப்புகள் என பல காரணங்களைக் கோடி காட்டி மாணவர்கள் தமிழ்வகுப்பிற்கு வருவதில்லை. மாணவர்களின் நோக்குநிலையில் இவையனைத்தும் நடைமுறையில் உள்ள சிக்கல்கள்தான் என்பதால், அவர்களையும் குறை கூறிவதற்கில்லை. இந்நிலையில் படிவம் 1 முதல் 5 வரை முறையான தமிழ்க்கல்வியைப் பெறாத மாணவர்கள் எஸ்பிஎம் தேர்வுக்கு அமர்ந்தாலும் கூட, நல்ல தேர்ச்சியைப் பெறுவது அவ்வளவு எளிதல்ல. "*தமிழ்ப்பள்ளியில் படித்த மாணவர்கள் இடைநிலைப் பள்ளிக்குச் செல்லும்போது, அங்கே PMR, SPM தேர்வுகள் (top scorer) ஆகச்சிறந்த அடைவாளர் பட்டியலை ஆக்கிரமித்து இருந்தால், தமிப்பள்ளியின் உற்பத்தி மீது சமூகத்திற்கு ஈர்ப்பும் மதிப்பும் உண்டாகும்.இடைநிலைப்பள்ளியின் முதல்வர்கள் தமிழ்ப்பள்ளி மாணவர்களை வரவேற்று வாழ்த்துவார்கள். தமிழ்ப்பள்ளி மாணவர்களால் பள்ளி அடைவுநிலை உயரும் என்று அவர்களுக்குத் தெரியும்" (குமரன்வேலு,*

*2020)*[4]. ஆனால், இடைநிலைப்பள்ளியில் தமிழ்மாணவர்களின் அடைவுநிலையோ அப்படி அமைவதில்லையே. தமிழ்க்கல்வி 200 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இந்நாட்டில் நிலைத்திருப்பினும், பிரெஞ்சு, அரேபிய மொழி போன்று தமிழ்மொழியையும் அந்நிய மொழிகளின் *(Bahasa Asing)* பட்டியலில் வைத்திருக்கும் வரை இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பது சற்று கடினம்தான்.

**தமிழாசிரியர்கள் பற்றாக்குறை**

தமிழ்ப்பள்ளிகளையும் இடைநிலைப்பள்ளிகளையும் ஒப்பிடுகையில், தமிழ்ப்பள்ளிகளில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் தமிழ்க்கல்வி பெற்றவர்களாகவும் தமிழ்மொழியில் கைத்தேர்ந்தவர்களாகவும் உள்ளனர். அதிலும் தமிழ்ப்பள்ளிகளில் தமிழாசிரியர் பற்றாக்குறை என்ற நிலை மிகவும் அரிதே. மாறாக, இடைநிலைப்பள்ளியில், பெரும்பாலும் பிற இன ஆசிரியர்களைத்தான் அதிகளவில் காண்கிறோம். இடைநிலைப்பள்ளியில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இந்திய ஆசிரியர்கள் இருப்பினும், தமிழாசிரியர்கள் என்று கூறும்பொழுது அத்திப் பூத்தாற் போன்றுதான் உள்ளனர். அதிகப்படியான தமிழ்மாணவர்கள் உள்ள பள்ளிகளில்தான் பொதுவாக முழு நேர தமிழாசிரியர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். குறைவான எண்ணிக்கையில் தமிழ் மாணவர்கள் இருக்கும் பள்ளிகளுக்குப் பகுதி நேர தமிழாசிரியர்கள் மாவட்ட கல்வி இலாகாவால் அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு பகுதி நேர ஆசிரியர்களால் நடத்தப்படும் வகுப்புகள் பிஓஎல்(POL) என்று அழைக்கப்படுகின்றன. இந்தப் பிஓஎல் வகுப்புகள் நடத்தப்பட வேண்டுமெனில், குறைந்தது 15 மாணவர்களாவது இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் உள்ளது. இதனால், 15 மாணவர்களுக்கும் குறைவாக இருக்கும் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்வகுப்புகள் பெரும்பாலும் நடத்தப்படுவதில்லை,

அப்படியே 15 மாணவர்கள் இருக்கும் பள்ளிகளில் இந்தப் பிஓஎல்(POL) நடத்தப்படும் பட்சத்தில், இத்தமிழ் வகுப்புகள் பெரும்பாலும் பிற பள்ளி ஆசிரியரால் நடத்தப்படுவதாலும், அட்டவணைக்கு அப்பாற்பட்டு நடத்தப்படுவதாலும், மாணவர்கள் முறையே வகுப்பிற்கு வருவதில்லை. அதுமட்டுமின்றி, வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே பார்க்கும் இத்தமிழாசியர்களுடன் நம் மாணவர்களால் ஒரு நல்லுறவை வளர்த்துக் கொள்ள முடியாததால் தமிழ்பாடத்தின் மீதும் தமிழ்வகுப்பின் மீதும் பற்று குறைகிறது. “*POL வகுப்புகளும் மாணவர்களின் தேர்வு முடிவுகளைப் பாதிக்கின்றன...மாணவர்கள் POL ஆசிரியர்களை வகுப்பு நேரத்தில் மட்டுமே சந்திக்கின்றனர். அவர்களால் பாடம் சம்பந்தமாக உருவாகும் கேள்விகளைத் தங்களின் தமிழ்மொழி ஆசிரியரிடம் கேட்டு விளக்கம் பெற இயலாமல் போகிறது”(கீர்த்தனா, 2018)*[5].

ஒரு முழு நேர தமிழாசிரியர் இருப்பின், வகுப்பு ஒரு நாள் மட்டுமே நடைபெற்றாலும் கூட, ஓய்வு நேரங்களிலும் பள்ளி வேளைக்கு அப்பாற்பட்டும் மாணவர்களால் அவ்வாசிரியரைச் சந்தித்து, சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ளவும் குற்றங் குறைகளையும் களைந்து கொள்ளவும் சூழல் அமையும். இதனால், , பகுதி நேர தமிழாசிரியரோ அல்லது தமிழாசிரியரே இல்லாத நிலையில் தமிழ்மாணவர்கள் எஸ்பிஎம் தேர்வுக்குத் தமிழ்மொழியைப் பதியவே தயக்கம் காட்டுகின்றனர். அதையும் மீறி, அதீத தமிழ்ப்பற்று கொண்ட சிறுபான்மை பெற்றோர்கள் சிலர்தான் தமிழாசிரியர் இல்லாத நிலையிலும் கூட மாணவர்களைப் பள்ளிக்கு வெளியே பணம் செலுத்தி கூடுதல் வகுப்பிற்கு அனுப்ப முனைகின்றனர். இதன் விளைவு, தமிழ்க்கல்வியை

மாணவர்கள் இடைநிலைப்பள்ளியில் பாதியோடு நிறுத்திவிடுகின்றனர்; மிக முக்கியமாக தேர்வுக்குப் பதிவது இல்லை.

**பள்ளி நிர்வாகம் தமிழ்மொழியைத் தேர்வு பாடமாக எடுப்பதற்குத் தடை**

6 வருடம் தமிழ்ப்பள்ளியில் தமிழ்க்கல்வியைச் சுமந்து வந்த மாணவர்கள் இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வியை இறக்கி வைப்பதற்கு ஒரு சில பள்ளி நிர்வாகத்தினரும் காரணமாக இருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. அதிலும் குறிப்பாக மேல்நிலை(படிவம் 4 & 5) இல் பயிலும் மாணவர்கள்தான் இச்சிக்கலுக்கு அதிகமாக ஆளாகின்றனர். முன்னதாகவே குறிப்பிட்டது போல, படிவம் 1 இல் இருந்து படிவம் 3 வரை 10 பாடங்களைப் படிக்க வேண்டிய சூழலில், மேல்நிலைக்குச் செல்லும் பொழுது பாடங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கின்றன. இதனைக் காரணமாக கொண்டு, தமிழ்மொழியைத் தேர்வுப் பாடமாக எடுக்க வேண்டும் என்ற எண்ணம் மாணவர்களுக்கே இருப்பினும், பல வேளைகளில் பள்ளி நிர்வாகம் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. *"தமிழ்மொழி பாடமானது கட்டாயமான பாடமாக இல்லாமையினாலும் மற்றும் தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்குக் குறித்த மாணவரொருவர் மலாய் ஆங்கிலம் முதலிய மொழிகளிலே தேர்ச்சி பெற வேண்டிய நிலை காணப்படுகின்றமையினாலும் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழி கற்றலிலானது ஆர்வம் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது"(கீற்று அகப்பக்கம்,2010)[6].*

*"தேர்ச்சி பெறாவிட்டால் பள்ளியின் அடைவுநிலையில் சரிவு ஏற்படும் என்ற அச்சத்தில் எஸ்.பி.எம்., எஸ்.டி.பி.எம். தேர்வுகளில் மாணவர்கள் தமிழ்மொழி பாடத்தைத் தேர்வு செய்வதற்கு இடைநிலைப்பள்ளி நிர்வாகங்கள் மற்றும் தமிழ் ஆசிரியர்கள் தடையாக இருப்பதை, மலேசியத் தமிழ்ப்பள்ளி கல்வி மேம்பாட்டு நலன் அபிவிருத்திச் சங்கம் அண்மையில் சாடி இருந்தது",(பெர்னாமா, 2022)[7] என்ற பத்திரிக்கை செய்தியும் இதனையேதான் குறிப்பிடுகிறது.* இந்நிலைப்பாட்டிற்கு அடித்தாளமாவது என்னவெனில், தமிழ்மொழியோடு தமிழ் இலக்கியத்தையும் எஸ்பிஎம் தேர்வில் எடுக்க விரும்பும் மாணவர்கள் 12 பாடங்களை எடுக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். அதிலும் அறிவியல் துறையில் பயிலும் மாணவர்கள் வேதியல், உடலியல், இயற்பியல் மற்றும் கூடுதல் கணிதம் ஆகிய 4 கடினமான பாடங்களையும் படிக்கின்றனர். எனவே, 12 பாடங்கள் எடுக்கும் மாணவர்களின் அடைவுநிலை நிச்சயம் சரிந்து விடும் என்ற எண்ணம் பல பள்ளி முதல்வர்களிடம் நிலவுகிறது. இவ்வகை பள்ளி மேலாண்மையினரின் கண்களில் அறிவியல் துறைக்குப் பொருந்தாதப் பாடமாக தென்படுவது தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும்தான். ஆகவே, இவ்வகை நிர்வாகம், பள்ளியில் இருக்கும் கல்வி ஆலோசகர்களின் (counsellors) துணையுடன் தமிழ்மாணவர்களைச் சந்தித்து, மேல்படிப்பிற்குத் தமிழ்க்கல்வி தேவையில்லை எனவும் தமிழ்மொழி பாடத்தினைக் கூடுதலாக எடுப்பதால் மாணவர்களின் ஒட்டுமொத்த அடைவுநிலை பாதிக்கப்படும் எனவும் பரப்புரை செய்கின்றனர். இவர்களின் பேச்சிலும் அறிவுரையிலும் மதிமயங்கி தமிழ்மொழிப் பாடத்தைப் புறக்கணிக்கும் தமிழ்மாணவர்களின் எண்ணிக்கை இந்நாளில் நீண்டு கொண்டே செல்கிறது.

**பெற்றோர்களின் மனநிலை**

மேற்கூறிய பள்ளி நிர்வாகத்திற்கு ஒத்துப் பாடும் சில பெற்றோர்களும் இன்றளவில் இருக்கத்தான் செய்கின்றனர் என்பது கவலைக்கிடமான செய்தியாகும். தனது பிள்ளைதான் 9

வருடம் தமிழ்க்கல்வி பெற்று விட்டானே, இனி அறிவியல் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் சிக்கலில்லை எனவும், படித்து முடித்தபின் வேலை வாய்ப்பிற்கு தமிழ்க்கல்வி உதவப் போவதில்லை எனவும் எண்ணம் கொண்டிருக்கும் பெற்றோர்கள்தான் சமுதாயத்தின் புல்லுருவிகள். இக்கருத்தை ஆமோதிக்கும் வகையில், *"என் மகனுக்குத் தமிழ் படிக்க விருப்பமில்லை. எனவே, தமிழ் வகுப்பில் என் மகனைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."* என்று *பெற்றோரே எழுதிய கடிதங்களைப் பெற்ற ஆசிரியர்கள் உண்டு. தமிழில் குறைவான புள்ளிகளைப் பெறுவதால் ஒட்டுமொத்தத் தேர்ச்சியும் வீழ்ச்சியடைவதும் இதற்குக் காரணமாகிறது. இதனை ஆழ்ந்து நோக்கினால், பெற்றோர் - மாணவர் மனநிலைக்கு இன்னொரு காரணமும் மறைவாக இருப்பதை உணரலாம். "தமிழ்க்கல்வி தமிழ்ப்பள்ளியோடு போதும். மருத்துவம், பொறியியல், கணினி, போன்ற உயர்கல்விக்குத் தமிழ் பயன்படாது. எனவே, இடைநிலைப்பள்ளியில் தமிழ் வேண்டாம்" என்ற எண்ணம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது(ந.பச்சைபாலன், 2015)*[8] என்று தமது வலைப்பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அறிவியல் துறையில் படிக்கும் மாணவன் எந்த வகையில் தமிழ்மொழியைத் தேர்வுப்பாடமாக எடுப்பதால் குறைந்து போகிறான் என்பது மிகப் பெரிய கேள்வியாய் உள்ளது. தமிழ்மொழியைத் தேர்வுப்பாடமாக எடுக்கும் மாணவர், பிற மாணவர்களைக் காட்டிலும், அரசாங்கப் பல்கலைக்கழகம் செல்லும் அதிக வாய்ப்பினைப் பெற்றுள்ளான் என்பதுதான் உண்மை நிலவரமாகும். அரசாங்க பல்கலைக்கழகம் செல்வதற்கு ஒரு மாணவன் எத்தனை "ஏ"க்கள் பெற்றுள்ளான் என்பதுதான் கணக்கிடப்படுகிறதே தவிர எந்தப் பாடத்தில் "ஏ" பெற்றுள்ளான் என்று கணக்கிடப்படுவதில்லை. ஆக, தமிழ்மொழி நம் மாணவர்கள் அரசாங்கப் பல்கலைக்கழகம் செல்ல கைக்கொடுக்கும் ஓர் ஊன்றுகோல் என்பதைப் பெற்றோர்களும் மாணவர்களும் உணர்ந்தாலன்றி மாற்றம் என்பது வெறும் ஏமாற்றம்தான்.

## தமிழ்மொழிக்கென தனி வகுப்பறை இல்லை

மேற்கூறிய காரணக்களோடு தொடர்புடைய சிக்கல்தான் தமிழ்மொழிக்கென தனி வகுப்பறை இல்லாத நிலையாகும். அட்டவணைக்கு அப்பாற்பட்டு தமிழ் வகுப்பு நடைபெறுவது ஒரு புறமிருக்க, காலை மாலை என இரண்டு அமர்வுகள் இருக்கும் பள்ளிகளில் வகுப்பறை பற்றாக்குறை பெரும் பாடாக உள்ளது. **"***இனம், மதம் வேறுபாடின்றி நாட்டிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கச் சமமான அளவில் கல்விச் சம்பந்தப்பட்ட உதவிகள் கிடைக்க வேண்டுமென்பதே மலேசிய அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது"(KPM, 2018)*[9]. கல்வி கொள்கைகளின் உறுதிமொழிக்கேற்ப தமிழ்மொழிக்கென தனியறை இருக்குமேயானால், மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் எந்தவொரு குழப்பமும் பதற்றமும் இல்லாத நிலையில் வகுப்பிற்கு வந்து செல்வர். ஆனால், சூழல் அப்படி அமைவது இல்லையே? தனியறை இல்லாத சிக்கலினால், மாணவரும் தமிழாசிரியரும் வகுப்பு நேரத்திற்குச் சற்று முன்னதாகவே பள்ளிக்கு வந்து, காலியாக உள்ள வகுப்பினைத் தேடிப்பிடித்து, தாமதாக வரும் மாணவருக்குத் தகவல் சொல்ல வகுப்புத் தலைவரை கட்டிடத்திற்குக் கீழே நிறுத்தி காவல் காக்கும் அளவிற்குத்தான் தமிழ் வகுப்புகளின் நிலை அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்றது .

இதுவே தமிழ்மொழிக்கென தனி அறை ஒதுக்கப்பட்டிருப்பின், மாணவர்கள் வகுப்பு நேரத்தில், குறிப்பிட்ட இடத்திற்கு எந்தவொரு கலக்கமும் இன்று வந்துச் சேரக்கூடும். மாறாக தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதமாக வரும் மாணவர்கள் கூட நேரடியாக வகுப்பு இருக்கும் இடத்திற்கு வந்துச் சேரலாம். ஒரு சில பள்ளிகளில் இன்றுவரை

தமிழ்வகுப்புகள் பள்ளிச் சிற்றுண்டிச் சாலையில் நடத்த வேண்டிய சூழல் இருப்பதால், மாணாக்கரும் தமிழாசிரியரும் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். ஒவ்வொரு மாணவனுக்கும் அமைதியான சூழலில் படிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற கல்வி கொள்கை இருப்பினும், தமிழ்மாணவர்கள் பெரும்பாலும் இதற்கெல்லாம் விதிவிலக்காகத்தான் இருக்கின்றனர். இஃது உடல் அளவிலும் ஏன் மன அளவிலும் கூட தமிழ்மாணவரைப் பாதிக்கின்றது. இச்சூழலில் இருந்து முதல் நிலை மாணாக்கர் தேறி வந்து விடும் நிகழ்தகவு இருந்தாலும், பையப் பயிலும் மாணவர்கள் பெரியளவில் தமிழ்வகுப்பிலிருந்தும் தமிழ்த்தேர்விலிருந்தும் காணாமல் போய் விடுகின்றனர்.

**முடிவுரை**

*ஒருவனுக்கு ஒரு பிறவில் கற்ற கல்வியானது அப்பிறவியோடு போகாது, ஏழு பிறவிகளும் தொடர்ந்து சென்று உதவும் என்கிறார் திருவள்ளுவர்.(ஆச்சர்யா, 2006)[10]. ஆகவே, கல்வியானது அதுவும் தாய்மொழிக்கல்வியானது ஒவ்வொரு மனிதனின் உயிர்மூச்சாகும்.* ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனது தாய்மொழியைக் கற்கும் உரிமை உண்டு. "*ஒரு தனி மனிதனின் இதயத்தைத் தொடவேண்டுமெனில் தாய்மொழியில்தான் பேச வேண்டும். பொது மொழியில் பேசினால் அவனின் எண்ணத்தை மட்டுமே அறிய முடியும்" (Nelson Mandela, 1990)[11].* ஆகவே, தாய்மொழிக் கல்வி என்பது நமது உயிர்மூச்சு; இக்கல்விக்கான உரிமையைத் தமிழ் மாணவர் நிலைநாட்டுவதற்கு முழுமையான வாய்ப்புகளும் வசதிகளும் வழங்கப்பட வேண்டும்; சிக்கல்கள் களையப்பட வேண்டும் என்பதே இவ்வாய்வின் பரிந்துரையாகும்.

## References:


1. Rajenthiran, N. S. (2021). *Malaysiavil Tamilkkalvi: Savalgalum Theervugalum[Tamil Education in Malaysia: Challenges and Solutions.]* Retrieved from https://www.tamilmurasu.com.sg/singapore/story20210704-69691.html
2. Sufean Hussein. (2004). *Pendidikan Di Malaysia: Sejarah, Sistem dan Falsafah.* Kuala Lumpur. Dewan Bahasa dan Pustaka.
3. Paramasivam, M. (2006). *Malaysiyavil Tamilar Kudiyetramum Thaaimozhiyin Nilamaiyum[Migration of Tamil and Mother Tongue Status in Malaysia]*. Journal of Indian Studies. https://doi.org/10.22452/JIS.vol9no1.3
4. Kumaranvelu. (2020). *Tamil Palligalil Maanavar Ennikkaiyai Athigarippathu Evvaaru[How to Increase Number of Students in Tamil Schools]*. Retrieved from https://malaysiaindru.my/187631
5. Kirtana, G. (2018). *Tamilmozhi Katral Karpittalil Idainilaippalli Maanavargal Ethirnookkum Sikkalgal[Problem Faced By PT3 Students in Teaching and Learning Tamil Language]*. Mualim Journal of Social Science and Humanities. eISSN 2590-3691.
6. Lenin, M. (2010). *Malaysia Thamilarum Inathuva Muranpaadugalum. Samakaala Samuugap Paarvaigal. [Malaysian Tamils and Racial Contradiction-Contemporary Perspective]*. Retrieved from https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/3900-2010-02-20-06-40-29
7. Moorthy, P, M. (2022). *Idainilaippalligalil Tamizh Paadath Thaervukkuth Thadai: Petrorukkum Pangundu[Tamil Subject is Banned as Examination Subject in Secondary*

*Schools: Parents Contribute too]*. Retrieved from https://www.bernama.com/tam/news.php?id=2052398.
8. Pachaibaalan, N. (2015). *Kaanaamal Poogum Maanavargal[Lost Students]*. Retrieved from http://patchaibalan.blogspot.com/2015/03/blog-post_29.html
9. Kementerian Pendidkan Malaysia. (2018). *Garis Panduan Pelaksanaan Pendidikan Sekolah Milik Masyarakat*. Kementerian Pendididkan Malaysia.
10. Acharcya, P. S. (2006). *Thirukkural 1330 Muula Paadalgalum Telivaana Vilakkavuraiyum [1330 Kurals and Clear Explanations]*. Narmatha Publishers.
11. Mandela, Nelson, 1918-2013. (1990). *Nelson Mandela: the struggle is my life: his speeches and writings brought together with historical documents and accounts of Mandela in prison by fellow-prisoners.* London :IDAF Publications,